# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.1
## OS.NO.56/2018,24/2019, 57/2019 and 66/2019
## (Joint trial)

**Name** : Lingamoorthy( 2nd plaintiff in OS.NO.56/2018)
**Father/Husband Name** : Sambasivam

**Age** : 58

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.01.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:3.40 p.m.**
**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நானும் என்னுடைய சகோதர் பன்னிர் செல்வமும் தனித்தனியாக இரண்டு செட்டில்மென்ட் பத்திரம் எழுதினோம் என்றாலும் அதன் தேதி தெரயுமா என்றாலும் தெரியாது, காட்பாடி அசல் வழக்கு 118/.2013 தள்ளுபடியாகி ஒரு வாரத்திற்குள் மேற்படி இரண்டு செட்டில்மென்ட் பத்திரம் பதிவு செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. உயர் நீதிமன்றத்திற்கு சென்று மேல்முறையீடு செய்த பிறகுதான் செட்டில்மென்ட் பத்திரம் பதிவு செய்தோம் என்றால் இல்லை மேல்முறையீடு போவதற்கு முன்பு உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆலோசனைபடி இந்த பத்திரம் ஏற்பாடு செய்துவிட்டு அதன் பிறகு மேல்முறையீடு செய்தோம். என் சகோதரர் எந்த சர்வே எண்ணில் செட்டில்மேன்ட செய்தார் என்று அதன் சப் டிவிசன் தெரியாது. நான் என் மகன் மீது செட்டில்மென்ட செய்த தேதி தெரியாது ( சாட்சி சொல்கிறார் நான் படிக்கவில்லை) அசல் வழக்கு 24/2019 ல் என் அண்ணன் அவர்

மனைவி மீது எழுதிய செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

அசல் வழக்கு 24/2019 ல் நான் தரப்பினர் அல்ல என் அண்ணன் மற்றும் அவருடைய வாரிசுகள் தரப்பினர். நான் என் மகன் மீது எழுதிய செட்டில்மேன்ட் பத்திரம் ரத்து செய்ய சொல்லி கலா வகையரா அசல் வழக்கு 57/2019 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, நான் என் பெயரில் இருந்ததை என் மகன் பெயரில் செட்டில்மென்ட் செய்தள்ளேன். இந்த வழக்குகளில் மொத்த குடும்ப வழக்கு 1 ஏக்கர் என்றால் சரிதான். அந்த 1 ஏக்கரில் எனக்கும், என் அண்ணன் பன்னீர் செல்வத்திற்கும் பாதி சொத்து மற்றும் கலா வகையராவுக்கு பாதி சொத்து என்றால் தவறு. நாங்கள் இருவரும் 50, 50 சென்டுக்கு எழுதிய பத்திரம் சட்டப்படியானது என்றால் தவறு. நான் தாக்கல் செய்த கூரச்சீட்டின் படிக்கு சாம்பசிவத்திற்கு பாதியும் மற்றும் கோவிந்தசாமிக்கு பாதி பாகம் என்றும் எழுதி உள்ளார்கள் என்றால் அதற்கு முன்பே உயில் எழுதப்பட்டது, உயிலில் கண்டுள்ள சொத்து தவிர மற்று சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டோம்.

உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படுவது குறித்து நான் தாக்கல் செய்த கூரச்சீட்டு தேதி 07.02.1978 ல் உயில் குறித்து குறிப்பிடவில்லை என்றால் என் அண்ணன் பன்னீர்செல்வத்திற்குதான் தெரியும். மேற்படி கூரச்சீட்டில் என் தாத்தா ஆதிமூல கவுண்டர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. உயில் எழுதியிருந்தால் என் தாத்தா கூரச்சீட்டில் சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் உயில் நானும் என் சகோதரரும் சேர்ந்து கூட்டு சதி செய்து போலியாக தயார் செய்ப்பட்டது என்பது சரியல்ல. உயிலில் கண்டுள்ள கையெழுத்து

ஆதிமூல கவுண்டரின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. சார் பதிவாளர் வந்து அவர் கையெழுத்து தான் என்று கூறிவிட்டு சென்றுள்ளார். பதிவாளர் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையெழுத்து ஒவ்வொன்றும் மாறியுள்ளது என்றும் தேதியும் மாறியுள்ளது என்று சொல்லிவிட்டு சென்றுள்ளார் என்றால் சரியல்ல.

04.06.2024 அன்று சார் பதிவாளர் குமரன் என்பவர் 3 வது பக்கத்தில் 2 வது பாராவில் கடைசி 2 வரிகளில் ஆதிமூல கவுண்டரின் 4 கையெழுத்துகளும் வெவ்வேறு மாதிரியாக உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவர் கையெழுத்து அப்படிதான் போடுவார். ஆதிமூலம் உயில் எழுதும் போது படுத்தப்படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல நல்ல நிலையில் தான் இருந்தார். உயில் எழுதிய தேதி தெரியாது. அசல் வழக்கு 57/2019 ல் கண்டுள்ள தாவா சொத்து குறித்து கோவிந்தசாமி வாரிசுகள் தனலட்சுமி வகையரா அனைவரும் சேர்ந்து கடந்த 18.06.2013 அன்று ஒரு பாக பிரிவினை பத்திரம் செய்து கொண்டார்கள் என்றால் அது தவறு. அந்த பாகப்பிரிவினை பத்திரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் இந்த சொத்து குறித்து பாகப்பிரிவினை செய்து கொண்டது தவறு.

நீதிமன்றத்தில் சாட்சி வாக்குமூலங்களில் லிங்கன் என்றதான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். முழு பெயர் லிங்கமூர்த்தி. நான் என் மகனுக்கு எழுதிய தான பத்திரத்தில் லிங்கன் என்று கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல லிங்கம் என்பதற்கு பதிலாக லிங்கன் என்று போட்டுவிட்டேன். அதை சரிசெய்ய ஆதார் கார்டில் லிங்கம் என்று போட்டேன். ஆதார் கார்டில் நான் பெயர் மாற்றியதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை.

நான் லிங்கன் என்று கையெழுத்து போட்டுவிட்டு தற்போது நீதிமன்றத்தை ஏமாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போட்டுள்ள பத்திரத்தில் வா.சா.ஆ. 9 ல் 3 இடத்தில் முதல் பக்கத்தில் லிங்கமூர்த்தி என்ற லிங்கன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் , அந்த 3 இடத்தில் லிங்கன், லிங்கன் என்பதை வரிபிளவு செய்து கூடுதலாக சேர்க்கப்பட்டது என்றாலும் எனக்கு படிக்க தெரியாது. அந்த ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது. என் அண்ணன் தான் படித்து பார்த்து வழக்கு தாக்கல் செய்தார். தாவா வழக்கில் உள்ள அனைத்து விவரங்களும் என் அண்ணனுக்குதான் தெரியும் என்றாலும் எனக்க தெரியாது என்றாலும் சரிதான்.

நானும் என் அண்ணனும் ஏமாற்று பேருவழி என்றாலும் ஏமாற்றுவதற்காக நாங்கள் அவ்வாறு செய்தோம் என்றால் சரியல்ல. எதிர் தரப்பினர்தான் அவ்வாறு செய்துவிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். என் அப்பா பெயர் சாம்பசிவ கவுண்டர் என்றால் சரிதான். கோவிந்தசாமி என் சித்தப்பா. என் சித்தப்பாவிடமிருந்து என் அப்பா17.10.1994 தேதியிட்ட கிரய பத்திரத்தின் அடிப்படையில் 32 செண்ட் கிரயம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு 57/2019 ல் கண்டுள்ள தாவா சொத்து வா,சா. ஆ, 12 முதல் கோவிந்தசாமி மற்றும் அவரது வாரிசுகள் தான் இதுநாள் வரையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு 24/2019 ல் கண்டுள்ள 50 செண்ட் நிலம் சரிவே எண். 324/1B1 எனக்கும் என் அண்ணன் பன்னீர் செல்வத்திற்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, பன்னிர்செல்வம் 50 செண்ட்டும் நான் 50 செண்ட்டும் தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் அதற்கான பட்டா

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம்.

அசல் வழக்கு 57/2019 ல் கண்டுள்ள 50 சென்ட் நிலம் சரிவே எண். 324/1B2 கோவிந்தசாமி வகையரா அவர்களுக்கு பாத்தியப்ப்ட்டது என்றும் அவர்களது வாரிசுகள் தான் தற்போது வரை அந்த சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் தவறு.

இன்றைய தேதியில் பட்டா என் பெயரில் உள்ளது. அது தவறு என்றாலும் அது 1998 ம் வருடம் என் பெயரிலும் என் அண்ணன் பெயரிலும் உள்ளது என்றாலும் அதுவும் பட்டா மாறுதல் உத்தரவு தான் பட்டா இல்லை என்றாலும் சரிதான். ( வா.சா.7) பட்டா புத்தகத்துடன் உயிலையும் சேர்த்து வழக்கிறஞரிடம் கொடுத்திருக்கிறேன்.

நான் சொல்வது போல் என் பெயரில் தனி பட்டா இல்லை என்பதால் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யாமல் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு 24/2019 ல் 50 சென்ட்க்கான பட்டா என் பெயரிலும் என் அண்ணன் பன்னீர்செல்வம் பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரியல்ல.

அசல் வழக்கு 57/2019 க்கான 50 சென்ட்க்கான கோவிந்தசாமி பெயரில் தனியாக பட்டா உள்ளது என்றால் தவறு. தாவா சொத்துக்கு இதுநான் வரையில் எந்த வரியும் கட்டவில்லை என்றால் ஆரம்பத்தில் கட்டி வந்தேன், அதன் பிறகு அவர்களும் கேட்கவில்லை நானும் கட்டவில்லை. நான் ஆரம்பத்தில் கட்டியதாக சொல்லப்படும் ரசீதை நீதிமனற்த்தில் தாக்கல் செய்யிவல்லை என்றால் சரிதான், வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

எனக்கு உரிமை இல்லாத சொத்தை என் மகன் மீது செட்டில்மேன்ட் எழுதியது சட்டபடியானது இல்லை என்றால் சரியல்ல.

03.07.2015 அன்று எழுதிய தான பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்வது சரியல்ல. என் அண்ணன் பன்னீர் செல்வம் அன்றைய தேதியில் என் அண்ணி பெயரில் எழுதிய தான செட்டில்மென்ட் ரத்து செய்ய வேண்டும் என்பது சரியல்ல.

அசல் வழக்கு 57/2019 கலா வகையரா கோரிய படி அவர்களுக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொல்வது சரியல்ல. அசல் வழக்கு 57/2019 ல் கண்டுள்ள சொத்து குறித்து அசல் வழக்கு 66/2019 வாதியான செல்வம் என்பவர் அந்த சொத்தின் மற்ற உரிமையாளர்களான கலா வகையராவிடமிருந்து கடந்த 15.07.2015 அன்று விடுதலை பத்திரம் முன்னிலைக்கு அசல் வழக்கு 66/2019 ல் கண்டுள்ள தாவா சொத்தை தனிப்பட்ட முறையில் சுவாதினம் எடுத்து கொண்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் அனுபவித்து வருகிற சொத்து சர்வே எண். 324/1B2 என்றால் சரியல்ல.

செல்வம் அனுபவித்து மேற்படி 50 சென்ட் நிலமானது நானோ என்னுடைய வாரிசுகளோ அவர் அனுபவித்து வரும் சொத்தில் அவரது அனுபவத்தை தடை செய்ய கூடாது என்று அசல் வழக்கு எண். 66/2019 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, அதற்காக தான் ஆவணங்கள் எல்லாம் தாக்கல் செய்திருக்கிறேன்.

நானும் என் அண்ணனும் சர்வே எண். 324/1B2 சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நானும் என் அண்ணனும் பொய்யான ஆவணங்கள் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு 57/2018 நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் தள்ளப்படி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

கலா வகையரா தாக்கல் செய்த அசல் வழக்கு எண்கள் 24/2019

மற்றும் 57/2019 அவர்கள் கோரியப்படி விளம்புகை பரிகாரம் மற்றும் தடையாணை பரிகாரம் பெற அறுகதை உள்ளவர்கள் என்றால் தவறு. செல்வம் தாக்கல் அசல் வழக்கு 66/2019 அவர் கோரியவாறு நிரந்திர உறுத்துக்கட்டளை பெற அறுகதை உள்ளவர் என்றால் சரியல்ல. மேற்கண்ட 3 வழக்குகளில் கண்டுள்ள வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தின் படி செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த அசல் வழக்கு 56/2018 பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 3.40 p.m.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.